சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – திருப்பூர் மாவட்டத்தில் கம்பியில்லா தகவல் தொடர்பு (Wireless sets) சாதனங்களைப் அமைத்தல் ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி–4) துறை

அரசாணை(நிலை) எண்.25 நாள்: 23.3. 2010

படிக்கப்பட்டவை:

1. அரசாணை(நிலை) எண்.134, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி4) துறை, நாள் 2.8.2007.
2. அரசாணை (நிலை) எண். 177, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மாஅதி4) துறை, நாள் 21.11.2008.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், கடித ந.க.எண்.33795/07/பரா 2–3, நாள் 10.8.2009.

******

ஆணை:

மாண்புமிகு அமைச்சர், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அவர்கள் 12.4.2007 அன்று சட்டப் பேரவையில், இயற்கை இடர்பாடுகள் ஏற்படும் பொழுதும், ஊரக வளர்ச்சித் திட்டங்களின் செயலாக்கத்தை தீவிரமாக கண்காணிக்கும் பொருட்டும் மாவட்டங்களில், மாவட்ட மற்றும் வட்டார அலுவலர்களுக்கு கம்பியில்லாத் தகவல் தொடர்பு சாதனங்கள் (Wireless sets) வழங்கப்படும் என்ற அறிவிப்பினை செய்தார்கள். அதனைத் தொடர்ந்து, 24 மாவட்டங்களில் கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்களைப் பொருத்துவதற்கு ரூ.3.76 கோடி மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிட்டது. மேலே 2–இல் படிக்கப்பட்ட அரசாணையின்படி மேலும் 6 மாவட்டங்களில் கம்பியில்லாத தகவல் தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளது.

2. அரசாணை (நிலை) எண்.134 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 02.08.2007–ல் வெளியிடப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி 2007–08 மற்றும் 2008–09 ஆண்டுகளில் மாவட்டங்களில் கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்கள் நிறுவப்பட்டதன் அடிப்படையில் 2009–10 ஆம் ஆண்டில் திருப்பூர் மாவட்டத்திற்கு கம்பியில்லா தகவல் தொடர்பு சாதனங்கள் நிறுவிட செலவினத்திற்கு ஒப்புதல் வழங்கவும், தொகையைப் பெற்று திருப்பூர் மாவட்டத்திற்கு அளிக்கவும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுமதி கோரியுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பிவைத்த செயற்குறிப்பினை அரசு கவனமாக ஆய்வு செய்து, திருப்பூர் மாவட்டத்தில் கம்பியில்லாத் தகவல் தொடர்பு சாதனங்கள்

நிறுவிட ரூ.6,92,950/– (ரூபாய் ஆறு இலட்சத்து தொண்ணூற்று இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பது மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட / அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்கிட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரமளித்து அரசு ஆணையிடுகிறது.

5. கம்பியில்லா தகவல் தொடர்பு அலைவரிசையை பெறுதல், கருவிகளைக் கொள்முதல் செய்வதற்கான திட்டம் மற்றும் இதற்கான மாவட்ட அளவிலான குழு அமைத்தல், கருவிகளின் ஆண்டு பராமரிப்பு செலவினம் மற்றும் பணியாளர் நியமனம் குறித்து பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள் குறித்து இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2515–00 ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் –102 சமுதாய மேம்பாடு–1 திட்டத்தில் சேராதது – KO மாவட்டங்களில் கம்பியில்லாத் தந்தி ஏற்பாட்டு முறையை அமைத்தல் – 09. உதவித் தொகை 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (குதொகு 2515 00 102 KO 0939)’’.

இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன் அலுவல் சார்பற்ற எண்.15347/ஊ.வ/2010 நாள் 22.3.2010 – இல் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி, சென்னை–15.
மாவட்ட ஆட்சியர் திருப்பூர் மாவட்டம்.
சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
மாநில தலைமைக் கணக்காயர், சென்னை–18/3.

நகல்
நிதி (ஊரக வளர்ச்சி) துறை, சென்னை–9.
நிதி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
துணை முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

<u>இணைப்பு</u>

(i) <u>தகவல் தொடர்பு அலைவரிசையை பெறுதல்</u>

கம்பியில்லாத் தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்துவதற்கு 146–174 Mhz வரை உள்ள அலைவரிசையை புது டெல்லியில் உள்ள தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கம்பியில்லா தகவல் தொடர்பு திட்ட குழுவிடம் அனுமதி பெற வேண்டும். தற்போது உள்ள நடைமுறைப்படி முதல் கட்டமாக மேற்கண்ட மத்திய அரசு துறையிடம் பல்வேறு மாவட்டங்களுக்கு தேவையான ரிப்பீட்டர் அலைவரிசையில் (Repeater Frequency) ஒதுக்கீடு செய்வதற்கு உரிய படிவத்தில் விண்ணப்பம் செய்ய வேண்டும். கம்பியில்லா தகவல் தொடர்பு திட்ட குழுவின் அலைவரிசை ஒதுக்கீட்டுக்கான கொள்கை அளவிலான கடிதம் பெறப்பட்டவுடன் கருவிகள் கொள்முதல் செய்வதற்கான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும்.

(ii) <u>கருவிகள் கொள்முதல் திட்டம்</u>

கம்பியில்லா தகவல் தொடர்பு கருவிகள் மத்திய அரசின் பொருள் வழங்குதல் மற்றும் தீர்வு தலைமை இயக்குநர், நிர்ணயித்த ஒப்பந்த விலையில் (DGS&D rate) வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(iii) <u>மாவட்ட அளவிலான குழு</u>

மாவட்ட அளவில் மத்திய அரசின் பொருள் வழங்குதல் மற்றும் தீர்வு தலைமை இயக்குநர், நிர்ணயித்த ஒப்பந்த விலையில் கம்பியில்லா தகவல் தொடர்பு கருவிகள் கொள்முதல் செய்வதை முடிவு செய்ய, கீழ்க்கண்டவாறு குழு அமைக்கப்பட வேண்டும்:-

| | | |
|---|---|---|
| (i) | மாவட்ட ஆட்சித் தலைவர் | தலைவர் |
| (ii) | திட்ட அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | உறுப்பினர் செயலாளர் |
| (iii) | செயற் பொறியாளர் (ஊ.வ) | மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உறுப்பினர் |
| (iv) | உதவி இயக்குநர் (கணக்கு) | உறுப்பினர் |
| (v) | உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) | உறுப்பினர் |

(iv) <u>கம்பியில்லா தகவல் தொடர்பு கருவிகள்</u>
<u>ஆண்டு பராமரிப்பு (Annual maintenance)</u>

இந்த கருவிகளுக்கான உத்திரவாத காலம் முடிவடைந்தபின் இக்கருவிகளை பராமரிப்பதற்காக, ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் (Annual maintenance contract) ஒன்றை (கருவிகளின் விலை மதிப்பிற்கு 2% மிகைப்படாமல்) ஏற்றுக் கொள்ளும் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளலாம். இதற்கான தொகையை, இயக்குநகரத்தில் வைத்துள்ள இத்திட்டத்தின் எஞ்சியுள்ள தொகையிலிருந்து அளிக்கப்படும். மேலும் இந்த செலவினம் சம்பந்தமாக கூடுதல் தொகை தேவைப்படின், ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரை ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்தும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையைப் பொறுத்த வரை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை நிர்வாக நிதியிலிருந்தும், செயற் பொறியாளர், உதவி செயற்பொறியாளர் அலுவலக நிர்வாக நிதியிலிருந்தும் பிற அலுவலகங்களைப் பொறுத்தவரை எதிர்பாராத சில்லரைச் செலவினங்களுக்கான தொகையிலிருந்தும் செலவு செய்து கொள்ளலாம்.

(V) <u>பணியாளர் நியமனம்</u>

கம்பியில்லா தகவல் தொடர்பு சாதன திட்டத்தை செயல்படுத்துவதற்கு புதிய பணியாளர் நியமனம் எதுவும் தேவையில்லை; வானொலி மேற்பார்வையாளர்கள் (Radio Supervisors) உள்ளிட்ட தற்போது உள்ள பணியாளர்களை பயன்படுத்தி தேவைப்படும் அன்றாட பணிகளை மேற்கொள்ளலாம்.

க.அஷோக் வர்தன் ஷெட்டி
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.